உங்கள் அபிமான
தினதமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்! கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள் வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 27.05.2026 • மலர் 04 • இதழ்: 147 • Edition : Nagercoil • 27.05.2026 • Vol : 04 • Issue : 147 • Page : 4 • Rs. 5/-

### மேகதாது அணை விவகாரம் தொடர்பாக

# பிரதமர் மோடிக்கு முதல்வர் கடிதம்

சென்னை, மே. 27

கர்நாடக அரசால் காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாதுஅணைதொடர்பாக உத்தேசிக்கப்பட்டுள்ள பூமிபூஜை நிகழ்வைத் தொடர்ந்து, தமிழ்நாட்டின் உரிமையை நிலைநாட்டிடவும், விவசாயிகளின் நலனைக் காத்திடவும், தமிழ்நாடு முதல்அமைச்சர் ஜோசப் விஜய், (26.05.2026) இந்திய பிரதமர் நரேந்திர மோடி க்கு கடிதம் எழுதி உள்ளார்.

இதுதொடர்பான அந்த கடிதத்தில் கூறப்பட்டுள்ளதாவது:

மாண்பமை சுப்ரீம் கோர்ட்டின்தீர்ப்பையும், காவிரி நடுவர் மன்றத்தின் (CWDT) இறுதி ஆணையையும் அப்பட்டமாக மீறும் வகையில், காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாது நீர்த்தேக்கத்திற்கான 'பூமி பூஜை' நடைபெறும் என்று கர்நாடக அரசு அறிவித்துள்ளதை கனிவான கவனத்திற்குக் கொண்டு வர விரும்புவதாகவும், கர்நாடக மாநில துணை முதல்மந்திரிஇதுதொடர்பாக பொது வெளியில் தெரிவித்திருப்பது தங்கள் வாழ்வாதாரத்திற்காக காவிரி ஆற்றையே நம்பியிருக்கும் தமிழ்நாட்டின் லட்சக்கணக்கான விவசாயிகளிடையே, மிகுந்த கவலையை ஏற்படுத்தியுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

காவிரி நதிநீர் பிரச்சினை என்பது மிகவும் முக்கியமானதொன்றாகும் என்றும், இப்பிரச்சினைக்கு சுமார் முப்பது ஆண்டுகளுக்கு மேல் நீண்ட சட்டப் போராட்டத்திற்குப் பின்னரே தீர்வு காணப்பட்டது என்பது இந்தியப் பிரதமர் அவர்கள் அறிந்ததே என்றும், 16.02.2018 அன்று மாண்பமை சுப்ரீம்கோர்ட்டு வழங்கிய தீர்ப்பு தற்போது அமல்படுத்தப்பட்டு வருகிறது என்றும், மேகதாது திட்டம், காவிரி நடுவர் மன்றம் அனுமதித்த திட்டங்களின் பட்டியலில் இடம்பெறவில்லை என்றும், இதனைமேற்கண்ட சுப்ரீம்கோர்ட்டின் தீர்ப்பும் உறுதிப்படுத்தியுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும், காவிரிப் படுகையானது நீர்ப் பற்றாக்குறை உள்ள படுகை என்பதைக் கருத்தில் கொண்டு, 50 சதவீத நம்பகத்தன்மை அடிப்படையில் கிடைக்கக்கூடிய நீர் ஏற்கனவே சம்பந்தப்பட்ட மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளதால் கூடுதல் நீரைப் பயன்படுத்துவதற்கோ அல்லது புதிய பெரிய நீர்த்தேக்கத்தை உருவாக்குவதற்கோ எவ்வித வாய்ப்பும் இல்லை என்பதாலும் 16.02.2018 தேதியிட்ட தீர்ப்பின் மூலம் மாண்பமை சுப்ரீம்கோர்ட்டால் உறுதி செய்யப்பட்ட, தீர்ப்பாயத்தின் இறுதித் தீர்ப்பில் குறிப்பாக அனுமதிக்கப்பட்டுள்ள திட்டங்களைத் தவிர்த்து, காவிரி ஆறு அல்லது அதன் துணை நதிகளின் குறுக்கே வேறு ஏதேனும் புதிய திட்டத்தைத் திட்டமிடுவது, மேற்குறிப்பிட்ட சுப்ரீம்கோர்ட்டின் தீர்ப்பில் தலையிடுவதற்குச்சமமானதாகும் என்று தமிழ்நாடு முதல்அமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

மாண்பமை சுப்ரீம்கோர்ட்டின் தீர்ப்பின்மூலம்திருத்தப்பட்ட இறுதித் தீர்ப்பின்படி, தமிழ்நாட்டிற்கு உறுதி செய்யப்பட வேண்டிய நீர்வரத்துக்கான மூன்று கூறுகளில் ஒன்றான 'கட்டுப்பாடற்ற நீர்ப்பிடிப்புப் பகுதியிலிருந்து' உருவாகும் நீர்வரத்தைத் தடுப்பதற்கு, கர்நாடக மாநிலம் முயன்று வருவதாகத் தமிழ்நாடு உறுதியாகக் கருதுகிறது என்றும், கர்நாடகாதமிழ்நாடு எல்லையின் மிக அருகிலேயே, 67.16 டி.எம்.சி. கொள்ளளவு கொண்ட ஒரு புதிய மேகதாது திட்டத்தை முன்மொழிவதன் மூலம் கர்நாடக மாநிலம் இம்முயற்சியை மேற்கொள்வதாகத் தமிழ்நாடு கருதுகிறது என்றும் தெரிவித்துள்ளார்.



மேலும், 16.02.2018 தேதியிட்ட தனது தீர்ப்பில், நீர்ப்பிடிப்புப் பகுதியின் மேல்பகுதியில் அமைந்துள்ள மாநிலமானது, கீழ்ப்பகுதியில் அமைந்துள்ள மாநிலத்திற்குத்திட்டமிடப்பட்ட நீர் விநியோகத்தைப் பாதிக்கும் வகையிலான எவ்விதநடவடிக்கையையும் மேற்கொள்ளக்கூடாது என்று மாண்பமை சுப்ரீம்கோர்ட்டு அறுதியிட்டுத் தீர்ப்பளித்துள்ளது என்பதால், கர்நாடக மாநிலம் ஒரு புதிய நீர்த்தேக்கத்தைக்கட்டுவதற்கு முன்மொழிந்துள்ள இச்செயலானது, மேற்கூறிய சுப்ரீம்கோர்ட்டின் தீர்ப்பின் மீதான ஒரு தெளிவான மீறலாகவே அமையும் என்றும் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, கர்நாடக மாநிலம், சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு (EIA) ஆய்வை மேற்கொள்வதற்கான ஆய்வு வரையறைகள் (Terms of Reference ToR) பெற முயன்றபோது, சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலைமாற்றஅமைச்சகத்தின் (MoEF & CC) வல்லுநர் மதிப்பீட்டுக் குழுவானது, 19.07.2019 அன்றுநடைபெற்றதனது கூட்டத்தில், இதில் மாநிலங்களுக்கு இடையிலான சிக்கல்கள் உள்ளதைக்கருத்தில்கொண்டு, சம்பந்தப்பட்ட மாநிலங்களுக்கு இடையே ஒரு இணக்கமான தீர்வு எட்டப்பட வேண்டும் என்று கருத்துத் தெரிவித்து, அக்கோரிக்கையைத் திருப்பியனுப்பியது என்பதை கவனத்திற்குக் கொண்டுவருவதாகவும், மேலும், சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம் (MoEF & CC) சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆய்வை மேற்கொள்வதற்கான ஆய்வு வரையறைகளை (ToR) இதுவரை வழங்கக் கூட இல்லை என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும் என்றும், எனவே, மேகதாது திட்டப் பணிகளை முன்னெடுத்துச் செல்ல கர்நாடக மாநிலம் மேற்கொள்ளும் முயற்சி, மாண்பமை சுப்ரீம்கோர்ட்டின் தீர்ப்பை மட்டுமல்லாமல், தற்போது நடைமுறையில் உள்ள சுற்றுச்சூழல் சட்டங்களையும் அப்பட்டமாக மீறும் செயலாகும் என்றும் தனது கடிதத்தில் தமிழ்நாடு முதல்அமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

இத்தகைய சூழலில், 16.02.2018 தேதியிட்ட தீர்ப்பை அதன் எழுத்துப்பூர்வ மற்றும் உள்ளார்ந்த உணர்வுகளுக்கு இணங்கச் செயல்படுத்தும் கடமை கொண்ட மத்திய ஜல் சக்தி அமைச்சகமும் (MoJS) மற்றும் மத்திய நீர்வள ஆணையமும் (CWC) தமிழ்நாடு அரசின் கோரிக்கையைப் பரிசீலிக்காமலேயே, கர்நாடகாவின் மேகதாது திட்ட முன்மொழிவை ஏற்றுப் பரிசீலித்து வருவது வியப்பளிக்கிறது என்று தெரிவித்துள்ளார்.

இச்சூழலில், மேகதாது திட்ட முன்மொழிவின் விரிவான திட்ட அறிக்கையானது (DPR), 05.02.2007 தேதியிட்ட காவிரி நடுவர் மன்றத்தின் (CWDT) இறுதி ஆணைக்கும், 16.02.2018 தேதியிட்ட மாண்பமை சுப்ரீம்கோர்ட்டின் தீர்ப்புக்கும் முரணாக அமைந்திருப்பதால், அத்திட்ட அறிக்கையை நிராகரிக்குமாறு மத்திய ஜல் சக்தி அமைச்சகம் மற்றும் மத்திய நீர்வள ஆணையம் (CWC) ஆகியவற்றில் தொடர்புடைய அலுவலர்களுக்கு அறிவுறுத்துமாறு கேட்டுக் கொள்வதாகவும், படுகையில் அமைந்துள்ள பிற மாநிலங்களின் ஒப்புதலைப் பெறாமல் எந்தவொரு புதிய திட்டத்தையும் மேற்கொள்ளக்கூடாது என்றும், மாண்பமை சுப்ரீம்கோர்ட்டின் தீர்ப்பை எவ்வகையிலும் மீறக்கூடாது என்றும் கர்நாடக அரசுக்கு அறிவுறுத்துமாறு இந்தியப் பிரதமர் அவர்களை தமிழ்நாடு முதல்அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் திறப்பு விழா சட்டமன்ற உறுப்பினர் க. சிந்து தலைமையில் நடைபெற்றது. இதில் தமிழக வெற்றிக்கழக வேலூர் மேற்கு மாவட்ட செயலாளர் ஆர்.வேல்முருகன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு ரிப்பன் வெட்டி திறந்து வைத்து குத்துவிளக்கேற்றினார். பின்னர் கட்சி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கினார்

## தேனி மாவட்டத்தில் வரும் 29ந் தேதி விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

தேனி, மே. 27

தேனி மாவட்டத்தில் விவசாயிகள்குறைதீர்க்கும் நாள் கூட்டம் வருகின்ற 29.05.2026 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில் மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத்சிங், தலைமையில் மாவட்ட ஆட்சியர்அலுவலக புதிய கூட்டரங்கில் நடைபெறவுள்ளது. தேனி மாவட்டத்தைச் சார்ந்த விவசாயிகள், விவசாய சங்கப் பிரதிநிதிகள் அந்தந்த வட்டாரத்தில் உள்ள வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை திட்டங்கள் குறித்த கோரிக்கைகளை விவசாயிகள்குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் கலந்து கொண்டு, மாவட்ட ஆட்சித்தலைவர் மனுக்களாக வழங்கலாம் விவசாயிகளிடமிருந்து பெறப்படும் மனுக்கள், சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அனுப்பி அதன்மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். எனவே, விவசாயிகள் மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள், இக்கூட்டத்தில் கலந்து கொண்டு பயனடையலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்.

தின தமிழ்
நிருபர்கள் தேவை
வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக
தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை
தகுதிகள்
குற்றவழக்குகள் இருக்கக் கூடாது. முன் அனுபவம், பட்டதாரி, தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்
மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்
99944 66200 – 70102 64701

## 10 நாட்களுக்குள் டாஸ்மாக் கடை மூடவிட்டால் உண்ணாவிரதம் இருப்போம்

### கலெக்டரிடம் சேதுபாவா சத்திரம் பகுதி மக்கள் மனு



தஞ்சாவூர் மே 27

10 நாட்களுக்குள் டாஸ்மார்க் கடை மூடவிட்டால் உண்ணாவிரத இருப் போம் என கலெக்டரிடம் சேது பாவா சத்திரம் மக்கள் மனு அளித்து ள்ளனர்

தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்ட ரங்கில் மக்கள் குறைதீர்க்கும் கூட்டம் நடந்தது தஞ்சாவூர் மாவட்டம் சேது பாவா சத்திரம் பகுதியைச் சேர்ந்த விவசாயிகள், சமூக ஆர்வலர்கள், என 10க்கும் மேற்பட்டவர்கள் கலெக்டர் அலுவலகத்திற்கு வந்தனர் .பின்னர் இவர்கள் கலெக்டர் பிரியங்கா பங்கஜத்திடம் மனு அளித்தனர் .அந்த மனுவில் கூறி இருப்பதாவது:

சேதுபாவாசத்திரம் ஊராட்சியில் இந்துக்கள், இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள் என அனைத்து தரப்பினர் ஜாதி மத பேதமின்றி சகோதர சகோதரிகளாக பழகி வருகிறோம். சேதுபாவா சத்திரம் கிழக்கு கடற்கரை சாலையில் பள்ளிகள், தர்கா, கோவில்கள், விசைப்படகு பழுது பார்க்கும் இடம் போலீஸ் நிலையம் ஆகியவை 100 மீட்டருக்குள்அமைக்கப்பட்டுள்ளது அந்த பகுதிகளை டாஸ்மார்க் கடை அமைக்க கூடாது என கடந்த 2024 ஆம் ஆண்டு முதல் எதிர்ப்பு தெரிவித்து மாவட்ட கலெக்டரிடம் புகார் கொடுத்து வருகின்றோம் மக்களின் கோரிக்கையை ஏற்காமல் அப்பகுதியில் புதிதாக டாஸ்மார்க் கடை திறக்கப்பட்டுள் ளது .தற்போதைய ஆட்சியில் தமிழக முதலமைச்சர் விஜய் வழிபாட்டுத்தலங்கள் கல்விக்கூடங் கள், பஸ் நிலையங்களில் இருந்து 500 மீட்டருக்குள் அமைந்த டாஸ் மார்க் கடைகளை நிரந்தரமாக மூட உத்தரவு பிறப்பித்து கடைகள் மூடப்பட்டு வருகின்றன.

சேதுபாவாசத்திரத்தில் புதிதாக அமைக்கப்பட்ட டாஸ்மார்க் கடையிலிருந்து 50 மீட்டர் நேர்எதிரே போலீஸ் நிலையமும், 100 மீட்டருக் குள் தொடக்கப்பள்ளி, உயர் நிலைப்பள்ளிஅமைந்துள்ளது. மேலும்100மீட்டருக்குள் வழிபாட்டுத் தலங்கள் உள்ளது. முதலமைச்சரின் உத்தரவை மீறி சேதுபாவா சத்திரத்தில் டாஸ்மார்க் கடை தொடர்ந்து இயங்கி வருவது அதிர்ச்சி அளிக்கிறது

இந்த கடையால் இளைஞர்கள், மாணவர்கள், விவசாயிகள், மீனவர்கள் ,வணிகர்கள் பலர் குடி போதைக்கு ஆளாகி அவர்களது குடும்பங்களின் எதிர்காலம் கேள்விக்குறியாக உள்ளது. எனவே சேதுபாவா சத்திரத்தில் உள்ள டாஸ்மாக் கடையை10 நாட்களுக் குள் முடாவிட்டால் உண்ணாவிரதம் இருக்க முடிவு செய்துள்ளோம் மேற்கண்டவாறு அதில் கூறப்பட்டுள்ளது

## தமிழகத்தில் பள்ளிகள் திறப்பு ஜூன் 4க்கு தள்ளிவைப்பு!

சென்னை, மே. 27

ஜூன் 1ம் தேதி பள்ளிகள் திறக்கப்படும் என தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில், கோடை வெயில் தாக்கம் காரணமாக ஜூன் 4ம் தேதி பள்ளிகள் திறக்கப்படும் எனதமிழக பள்ளிக் கல்வித் துறை அறிவித்துள்ளது.

தமிழகத்தில் 2026–2027ஆம் கல்வியாண்டுக்கான பள்ளிகள் திறப்பு குறித்து பள்ளிக் கல்வித் துறை முக்கிய அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில், 4ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு ஜூன் 1ஆம் தேதியும், 1ம் வகுப்பு முதல் 3ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு ஜூன் 4ம் தேதியும் பள்ளிகள் திறக்கப்படும் என ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

இருப்பினும், பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் பல்வேறு தரப்பினரிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டன. அந்த கோரிக்கைகளையும், தற்போதைய வானிலை முன்னறிவிப்புகளையும் கருத்தில் கொண்டு, அமைச்சர் ராஜ்மோகன் அறிவுறுத்தலின்படி, பள்ளிக் கல்வித் துறை தற்போது புதிய முடிவை எடுத்துள்ளது.

அதன்படி,தமிழகத்தில்உள்ளஅனைத்து அரசு, அரசு உதவி பெறும், மெட்ரிக் மற்றும்தனியார்பள்ளிகள்அனைத்தும், 1ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை உள்ள அனைத்து மாணவர்களுக்கும் வருகின்ற ஜூன் 4 அன்று ஒரேநாளில் பள்ளிகள் திறக்கப்படும்.

பள்ளிகள் திறப்பதற்கு முன்னதாக, கல்வித் துறை அதிகாரிகள் பள்ளிகளில் சுகாதார வசதிகள், குடிநீர் வசதி மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகளை உறுதி செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். பெற்றோர்கள், ஆசிரியர்கள், பள்ளி நிர்வாகங்கள் மற்றும் பொதுமக்களின் ஒத்துழைப்பு கோரப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தி.நகர் தொகுதி வளர்ச்சிப் பணிகள்: அனைத்துத் துறை அதிகாரிகளுடன் அமைச்சர் என்.ஆனந்த் ஆலோசனை

சென்னை, மே. 27

தமிழ்நாடு முதல்அமைச்சர் அறிவுறுத்தலின் படி இன்று ஊரக வளர்ச்சி மற்றும் நீர்வளத்துறை அமைச்சரும், தியாகராய நகர் சட்டமன்ற உறுப்பினருமான என். ஆனந்த் சென்னை தலைமை செயலகத்தில் கலந்தாய்வுக் கூட்டம் இன்று நடைபெற்றது.

இதில், தியாகராய நகர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட காவல்துறை, மின்சாரத்துறை, சென்னை மாநகராட்சி, குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் அனைத்து துறை அலுவலர்களையும் அழைத்து தொகுதி வளர்ச்சி பணிகள் குறித்தும் தொகுதியில் நிறைவேற்றப்பட வேண்டிய திட்டங்கள் குறித்தும் ஆலோசனை நடத்தி பின்வரும் அறிவுரைகளை வழங்கினார்.

★ பொதுமக்கள் பாதுகாப்புக்கு எந்த வித பாதிப்பும் வரக்கூடாது.

★ சட்டம் ஒழுங்கு சிறப்பாக இருக்க வேண்டும்.

★ தொகுதி முழுவதும் சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்பட வேண்டும்.

★ தொகுதி முழுவதும் இரவு நேரங்களிலும் வெளிச்சம் உள்ள வகையில் தெரு விளக்குகள் அமைக்கப்பட வேண்டும்.

★ இருள் இல்லாத பகுதியாக தியாகராய நகர் பகுதி முழுவதும் இருக்க வேண்டும்.

★ பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும்.

★ குறிப்பாக பெண் குழந்தைகள் பாதுகாப்பாக இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

★ கஞ்சா போன்ற போதை வஸ்துக்களின் நடவடிக்கைகள் தொகுதியில் எங்குமே இருக்கக் கூடாது.

★ டாஸ்மாக் கடைகள் சரியான நேரத்தில் மூடப்பட வேண்டும்.

★ பள்ளிக்கூடங்கள், பொதுமக்கள் கூடும் இடங்களில் தீவிரமாக கண்காணிக்கப்பட வேண்டும்.

★ போக்குவரத்து நெரிசல் இல்லாமல் போக்குவரத்தை சீர் செய்ய வேண்டும்.

★ மக்களின் அத்தியாவசிய தேவைகளை உடனடியாக நிறைவேற்றித் தர வேண்டும்.

★ மின்சாரம், தண்ணீர், மருத்துவம், உள்ளிட்டஅத்தியாவசியதேவைகள்அனைத்து எந்த பிரச்சனையும் இல்லாமல் பொதுமக்களுக்கு கிடைத்திட வேண்டும்.

★ தெரு நாய்கள் பிரச்சனை இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

இந்த ஆலோசனை கூட்டத்தில் காவல் துறை துணை ஆணையாளர் V.R. சீனிவாசன், இ.கா.ப., சிவில் சப்ளை உதவிஆணையாளர் அபிநயா, வட்டாட்சியர் D. வாணி. மின்துறை செயற்பொறியாளர் ஏ. வெங்கடேசன், பெருநகர சென்னை மாநகராட்சி செயற்பொறியாளர் எம். கமலக்கண்ணன் மற்றும் சென்னை மாநகராட்சி அலுவலர்கள் பங்கேற்றனர்.

# தூத்துக்குடி மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளரை திமுக முன்னாள் அமைச்சர் கீதா ஜீவன் மரியாதை நிமித்தமாக சந்திப்பு



தூத்துக்குடி, மே. 27

தூத்துக்குடி மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அபிஷேக் குப்தாவை இன்று தூத்துக்குடி வடக்கு மாவட்ட திமுக செயலாளரும், முன்னாள் அமைச்சருமான கீதா ஜீவன் மரியாதை நிமித்தமாக சந்தித்தார். உடன் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் மார்க்கண்டேயன், கோவில்பட்டி சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் கருணாநிதி, மாநகர திமுக செயலாளர் ஆனந்தசேகரன் ஆகியோர் உடனிருந்தனர்.

# வேடநத்தம் மாணவி கொலை வழக்கில் குற்றவாளிக்கு இரட்டை தூக்கு தண்டனை நீதிபதி அதிரடி தீர்ப்பு



தூத்துக்குடி, மே. 27

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் அருகே உள்ள வேடநத்தம் கிராமத்தைச் சேர்ந்த 12ஆம் வகுப்புப் பள்ளி மாணவி ஒருவர், கடந்த மார்ச் மாதம் கொடூரமான முறையில் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டார்.

இச்சம்பவம் தமிழ்நாடு முழுவதும் பெரும் கொந்தளிப்பையும், சட்டம்ஒழுங்கு உள்கட்டமைப்பில் விவாதங்களையும் ஏற்படுத்தியது. இவ்வழக்கில் தீவிரப் புலனாய்வு மேற்கொண்ட மாவட்டக் காவல் துறையினர், வேடநத்தம் பகுதியைச் சேர்ந்த தர்ம முனீஸ்வரன் என்ற முக்கியக் குற்றவாளியைக் கைது செய்து சிறையில் அடைத்தனர். காவல் துறையினரின் விசாரணையில், குற்றவாளி தர்ம முனீஸ்வரன் ஏற்கனவே ஒரு மூதாட்டியைப் பாலியல் வன்கொடுமை செய்து, படுகொலை செய்த வழக்கில் கைது செய்யப்பட்டுச் சிறையிலிருந்தது நபர் என்பது தெரியவந்தது.

அந்த வழக்கில் நீதிமன்ற ஜாமீனில் வெளியில் வந்திருந்த நிலையில் தான், மீண்டும் பள்ளி மாணவியைக் குறிவைத்து இத்தகைய கொடூரக் குற்றச் சம்பவத்தில் அவர் ஈடுபட்டுள்ளார் என்பதைப் போலீஸார் ஆதாரங்களுடன் நீதிமன்றத்தில் நிரூபித்தனர். இவ்வழக்கின் அனைத்துத்தரப்பு விசாரணைகளும், சாட்சிகள் மற்றும் ஆதாரங்கள் சமர்ப்பிக்கும் பணிகளும் தூத்துக்குடி மாவட்டப் போக்சோ சிறப்பு நீதிமன்றத்தில் முழுமையாக நிறைவடைந்தன.

இதனைத் தொடர்ந்து இன்று காலை நீதிமன்றம் கூடியவுடன், குற்றவாளி தர்ம முனீஸ்வரன் மீதான கொடூரக் குற்றச்சாட்டுகள் அனைத்தும் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாகக் கூறி, அவரைப் போக்சோ நீதிமன்ற நீதிபதி அதிகாரப்பூர்வமாகக் குற்றவாளி எனத் தீர்ப்பளித்தார். குற்றவாளி என அறிவிக்கப்பட்டுள்ள தர்ம முனீஸ்வர னுக்கான இறுதித் தண்டனை தீர்ப்பு பிற்பகல் 1.00 மணிக்கு நீதிமன்றத்தில் நீதிபதி பிரீத்தா அதிகாரப் பூர்வமாக வெளியிட்டார்.

குற்றவாளி தர்மமுனீஸ்வரனுக்கு இரட்டை தூக்கு தண்டனை விதித்து நீதிபதி அதிரடி தீர்ப்பு வழங்கினார். இந்த வழக்கில் அரசு தரப்பு வழக்கறிஞராக எல்லம்மாள் கிஸிங்கர் சிறப்பாக வாதாடினார். தொடர் குற்றங்களில் ஈடுபட்டு வந்த நபருக்குக் கடுமையான தண்டனை கிடைக்கப் போகிறது என்பதால் தூத்துக்குடி நீதிமன்ற வளாகத்தில் பலத்த போலீஸ் பாதுகாப்புடன் பெரும் பரபரப்பு நிலவியது.

# விளாத்திகுளம் பேரூராட்சியில் எம்எல்ஏ மார்கண்டேயன் ஆய்வு



விளாத்திகுளம் மே 27.

விளாத்திகுளம் பேரூராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் நடைபெறும் மற்றும் நடைபெற வேண்டிய திட்ட பணிகள் மேலும் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் நடைபெறும் சீரமைப்பு பணிகள் குறித்து விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் மார்கண்டேயன் ஆய்வு மேற்கொண்டார்.

இந்த நிகழ்வில் விளாத்திகுளம் பேரூராட்சிசெயல்அலுவலர்சுப்பிரமணியன், விளாத்திகுளம் பேரூராட்சி மன்ற தலைவர் சூர்யா அய்யன்ராஜ், விளாத்திகுளம் பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் வேலுச்சாமி, பேரூராட்சி மன்றமுன்னாள் துணைத் தலைவர் மாரியப்பன், மாவட்ட பிரதிநிதி ராமலிங்கம், வார்டு உறுப்பினர்கள் கலைச்செல்வி செண்பகராஜ், வேல்ஈஸ்வரிஅன்பில் நாராயணமூர்த்தி என பலர் கலந்து கொண்டனர்.

# ஈரோடு மாவட்ட நீர்நிலைகளில் இலவசமாக வண்டல் மண் எடுக்கலாம்

ஈரோடு மே 27

ஈரோடு மாவட்டத்தில் நீர்வளத்துறை மற்றும் ஊரக வளர்ச்சித்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள 411 ஏரி, குளங்களில் படிந்துள்ள 1,27,72,883 கன மீட்டர் அளவுள்ள வண்டல் மண் , களிமண் விவசாயிகள், பொதுமக்கள் மற்றும் மண்பாண்டத் தொழிலாளர்கள் தங்களின் சொந்தப் பயன்பாட்டிற்காக இலவசமாக வெட்டி எடுத்துச் செல்ல ஈரோடு மாவட்ட சிறப்பு அரசிதழ்கள் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றில் தற்பொழுது 361 நீர்நிலைகளில் 51,82,200 கனமீட்டர் வண்டல் மண், களிமண் எடுக்க அனுமதி வழங்கப்பட்டு உள்ளது.

இந்த மண்ணை வட்டாட்சியரின் அனுமதி பெற்று, அதிகபட்சமாக 30 நாட்களுக்குள் எடுத்துக்கொள்ள வேண்டும். விருப்பமுள்ளவர்கள் இணையதளம் வழியாக விண்ணப்பிக்கலாம். இதன்படி, விவசாயிகள் தங்களின் நன்செய் நிலத்திற்கு ஒரு ஏக்கருக்கு 75 கனமீட்டர் (அல்லது ஒரு ஹெக்டேருக்கு 185 கனமீட்டர்) வரையிலும், புன்செய் நிலத்திற்கு ஒரு ஏக்கருக்கு 90 கனமீட்டர் (அல்லது ஒரு ஹெக்டேருக்கு 222 கனமீட்டர்) வரையிலும் வண்டல் மண் எடுத்துக்கொள்ளலாம். மேலும், பொதுமக்களின் சொந்தப் பயன்பாட்டிற்கு 30 கனமீட்டர் வரையிலும், மண்பாண்டத் தொழிலாளர்கள் தங்களின் தொழில் தேவைக்காக 60 கனமீட்டர் வரையிலும் களிமண்ணைக் கட்டணமின்றி எடுத்துச் செல்ல அனுமதி வழங்கப்படும்.

இந்த சலுகையைப் பெற விண்ணப்பதாரரின் இருப்பிடம் அல்லது அவரது விவசாய நிலம், மண் எடுக்கப்படும் நீர்நிலை அமைந்துள்ள அதே வருவாய் வட்டத்திற்குள் இருக்க வேண்டும். விவசாயிகள் தங்களின் விண்ணபத்துடன் சிட்டா மற்றும் அடங்கல் நகல்களை இணைக்க வேண்டும். மண்பாண்டத் தொழிலா ளர்கள் மண் எடுக்க விண்ணப்பிக்கு ம்போது, சம்பந்தப்பட்ட மண்பாண்டத் தொழிலாளர் கூட்டுறவு சங்கத்தின் சான்று அல்லது கிராம நிர்வாக அதிகாரியின் சான்றைச் சமர்ப்பிக்க வேண்டும்

மேலும் விபரங்களுக்கு சம்மந்தப்பட்ட வட்டாட்சியர் அலுவலகத்தை தொடர்பு கொண்டு விபரங்களை பெற்றுக்கொள்ள தெரிவிக்கப்படுகிறது. இத்தகவலை ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## திருச்சி ஜி ஹெச்

# எபோலா வைரஸ் புதிய வார்டு தொடக்கம்



திருச்சி, மே. 27

மத்திய சுகாதார அமைச்சகம் எபோலா நோய் தடுப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளது. இதன் ஒரு பகுதியாக, திருச்சி விமான நிலையம் வரும் நோய் அறிகுறிகளுடன் கூடிய நபர்களைக் கண்டறிந்து சிகிச்சை அளிக்க, திருச்சி மகாத்மா காந்தி அரசு மருத்துவமனையில் 10 படுக்கைகளுடன் தனி வார்டு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த வார்டில் 24 மணி நேரமும் மருத்துவ சேவை தயார் நிலையில் இருக்கும் எனமருத்துவமனைடீன்குமரவேல்தெரிவித்துள்ளார்.



## திருச்சி

# பிறந்தநாள் கொண்டாடிய திருவானைக்காவல் கோவில் யானை

திருச்சி, மே. 27

திருச்சி திருவானைக்காவல் ஜம்புகேஸ்வரர் அகிலாண்டேஸ்வரி அம்மன் கோவிலில் உள்ள பெண் யானை அகிலாவுக்கு நேற்று சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு பூஜை நடைபெற்றது. 24வது வயதில் அடியெடுத்து வைத்துள்ள யானைக்கு பக்தர்கள் பழங்கள் கொடுத்து உபசரித்தனர். இந்த சிறப்பு பூஜையில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் ரமேஷ் கலந்துகொண்டார். 2011 டிசம்பர் 6 அன்று அசாம் மாநிலத்திலிருந்து கொண்டுவரப்பட்ட அகிலாவுக்கு இந்த பெயர் சூட்டப்பட்டது.




## திருச்சி பேருந்து நிலையத்தில்

# இரு தரப்பு மோதல்; போலீசார் குவிப்பு

திருச்சி, மே. 27

திருச்சியில் சனாதனத்தை ஒழிக்க வலியுறுத்தி மக்கள் கலை இலக்கிய கழகத்தினர் நடத்திய ஆர்ப்பாட்டத்தை காவல்துறையினர் தடுத்து நிறுத்தி கைது செய்தனர். அதே சமயம், சனாதனத்துக்கு ஆதரவாக இந்து முன்னணி கட்சியினர் கோஷம் எழுப்பினர். இதனால் இரு தரப்பினருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டு, குச்சி, காலணி, வாட்டர் பாட்டிலால் தாக்கிக் கொண்டனர். இதனால் பரபரப்பு ஏற்பட்டது. போலீசார் அனைவரையும் கைது செய்து அப்புறப்படுத்தினர்.

## வைகாசி விசாகத்தை முன்னிட்டு

# திருச்செந்தூருக்கு பக்தர்கள் பாதயாத்திரை



முதுகுளத்தூர், மே27

இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் வட்டம், கிடாத்திருக்கையில் இருந்து வைகாசி விசாகத்தை முன்னிட்டு பக்தர்கள் பாதயாத்திரையாக சென்று முருகப்பெருமானை தரிசிக்க புறப்பட்டனர். முன்னதாக பக்தர்களுக்கு பொதுஅன்னதானம் வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து நந்தவனத்தில் இருந்து திரு செந்தில்ஆண்டவர் பாதயாத்திரை குழுவினர் அரோகரா கோஷமிட்டு பாதயாத்திரியை தொடங்கினர்.



சென்னை செங்குன்றம், பாடியநல்லூர் ஜிஎஸ்டி ரோடு, (ரேவதி ஸ்டோர் எதிரில்), ஏ ஆர் டி எஸ் அறக்கட்டளை & மாயா பார்ட்டி ஹால் திறப்பு விழா நடைபெற்றது. ஆன்மீக செம்மல் லயன் டாக்டர் ஏ.ஆர் தர்மலிங்கம் யாதவ், சமூக பொருளாதார முன்னேற்ற அறக்கட்டளை, ஜூபில் பிளாட்ஸ் & ஹவுசிங் டெவலப்மென்ட் நிறுவன தலைவர், ராணிசங்குபதி தர்மலிங்கம் திறந்து வைத்தனர். திறப்பு விழாவிற்கு வருகை தந்த அனைவரையும், எம் சரவணன் மாயா, எஸ். கலைசெல்வி, எம் சங்கர்மாயா, எஸ்.ராணி இவர்கள் வரவேற்றனர்.

## குமரியில்

# கல்குவாரிகள் குறித்து அமைச்சருக்கு தவறான தகவல் அளித்த அதிகாரிகள்

### சிறப்பு அதிரடி படைகளை நியமித்து ஆய்வு செய்யப்படுமா?

நாகர்கோவில் , மே.27

தமிழகம் முழுவதும் கல் குவாரிகளில் ஆய்வு செய்து விதிமீறல்கள் இருந்தால் அவற்றை மூட நடவடிக்கை எடுக்க தமிழக இயற்கை வளங்கள் துறை அமைச்சர் பிரபு உத்தரவிட்டு இருந்தார். அதன்படி பல்வேறு மாவட்டங்களில் ஆய்வுகள் நடந்து வருகிறது.

குமரி மாவட்டத்தில் புவியியல் மற்றும் சுரங்க துறை உதவி இயக்குனரால் ஆளில்லா விமானம் மூலம் நடத்திய ஆய்வில் 15 கல்குவாரிகளில் ஆய்வு நடத்தியதாகவும், அதில் 2 கல்குவாரிகளில் விதிமீறல்கள் உள்ளதாகவும் அமைச்சரின்உத்தரவுப்படிமூடப்பட்டதாகவும் தகவல் வெளியாகி உள்ளது.

ஆனால் குமரி மாவட்டத்தில் இருந்த 15 கல்குவாரிகளில் ஆறு மட்டுமே செயல்பாட்டில் இருப்பதாக கடந்த 2026 மார்ச் மாதம் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் வழங்கப்பட்ட தகவலில் குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும் சட்டவிரோதமாக தோட்டியோடு பகுதியில் இயங்கிய 2 கல்குவாரிகள் மீது மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர் ஸ்டாலின் அதிரடி சோதனை நடத்தி கல்குவாரி உரிமையாளர்கள் மற்றும் சட்ட விரோதமாக வெடி பொருட்கள் வைத்திருந்த நபர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு அவர்களை கைது செய்து, அந்த கல்குவாரிகள் கடந்த மார்ச் மாதமே மூடப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் தமிழக இயற்கை வளங்கள் துறை அமைச்சர் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு வருகை தந்த போது ஆளில்லா விமானம் மூலம் ஆய்வு நடத்தியதாகவும், அதில் 2 கல்குவாரிகள் விதி மீறல்களில் ஈடுபட்டுள்ளதாக கூறி மூடப்பட்டதாகவும் அமைச்சருக்கு தவறான தகவல்கள் அளிக்கப்பட்டு அதன் அடிப்படையில் இரண்டு கல் குவாரியையும் மூட அமைச்சர் உத்தரவிட்டதாக கூறப்பட்டுள்ளது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

தமிழகத்தில் புதிய அரசு அமைந்த பின்னர் புதிதாக பொறுப்பேற்று இருந்த இயற்கை வளங்கள் துறை அமைச்சருக்கு பொய் தகவல்களை வழங்கி அல்வா கொடுத்த விவகாரம் தற்போது ஆதாரங்களுடன் வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. ஆட்சி மாறினாலும் காட்சிகள் மாறவில்லை .

குமரியில் கடந்த ஆட்சியில் நியமிக்கப்பட்ட மாவட்ட காவல் கண்காணிப்பாளரை தவிர ஏனைய அதிகாரிகள் பல்வேறு குற்றச்சாட்டுகளுக்கும் உள்ளான நிலையில் அவர்களை இதுவரை குமரி மாவட்டத்தில் இருந்து பணியிட மாற்றம் செய்ய எந்த நடவடிக்கையும் எடுக்காததன் விளைவு புதிய அரசியலில் புதிதாக பதவியேற்று குமரி மாவட்டத்திற்கு வந்த அமைச்சருக்கு பொய் தகவலை கொடுத்து ஏமாற்றும் அளவுக்கு அதிகாரிகள் செயல்பாடு மிகவும் மோசமாக உள்ளது.

ஆகவே குமரி மாவட்டத்தில் தற்போது பணிபுரிந்து வரும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தவிர ஏனைய அதிகாரிகளை மாற்றம் செய்ய நடவடிக்கை எடுப்பதோடு, குமரி மாவட்டத்தில் உள்ள கல்குவாரிகளில் ஆய்வு செய்ய சிறப்பு அதிரடிப்படையில் நேர்மையான அதிகாரிகளை நியமித்து ஆய்வு செய்தும் அதேபோல தமிழகத்தில் உள்ள அனைத்து கல்குவாரிகளையும் நேர்மையான சிறப்பு அதிகாரிகளை நியமித்து ஆய்வு செய்தால் மட்டுமே தமிழகம் முழுவதும் விதி மீறல்களில் ஈடுபட்ட கல்குவாரிகள் எவை எவை என கண்டுபிடிக்க முடியும் என்பது தான் நிதர்சனமான உண்மை என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## தூத்துக்குடி சட்டமன்றத் தொகுதியின்

# 'முரட்டு பக்தர் ' பெரியசாமியின் 9ஆம் ஆண்டு நினைவு தினம் அனுசரிப்பு



தூத்துக்குடி, மே. 27

தூத்துக்குடி சட்டமன்றத் தொகுதியின் முன்னாள் உறுப்பினரும், திமுகவின் மறைந்த தூத்துக்குடி மாவட்டச் செயலாளருமான 'முரட்டு பக்தர் ' பெரியசாமியின் 9ஆம் ஆண்டு நினைவு தினம் இன்று (மே 26) அனுசரிக்கப்பட்டது.

இதையொட்டி, தூத்துக்குடி போல்பேட்டையில் அமைந்துள்ள அவரது நினைவிடத்தில் தூத்துக்குடி வடக்கு மாவட்ட திமுக செயலாளரும், முன்னாள் அமைச்சருமான பெ. கீதா ஜீவன், அவரது சகோதரரும் தூத்துக்குடி மாநகராட்சி மேயருமான என்.பி. ஜெகன் ஆகியோர் தலைமையில் திமுகவினர் திரளாகக் கூடி மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

தொடர்ந்து, தூத்துக்குடி கீதா ஹோட்டல் வளாகத்தில் மறைந்த பெரியசாமியின் நினைவு நாளை முன்னிட்டு பொது மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வேட்டி சேலை வழங்கப்பட்டது அதனை தொடர்ந்து பிரம்மாண்ட அன்னதான வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த அன்னதான நிகழ்வை முன்னாள் அமைச்சர் பெ. கீதாஜீவன் மற்றும் மேயர் என்.பி. ஜெகன் ஆகியோர் முறைப்படி தொடங்கி வைத்தனர்.

இந்நிகழ்வில் திமுக சட்டமன்ற உறுப்பினர்கள் GVமார்க்கண்டேயன்(விளாத்திகுளம்) கருணாநிதி (கோவில்பட்டி) அனிதா ராதாகிருஷ்ணன் (திருச்செந்தூர்) மற்றும் தூத்துக்குடி மாநகராட்சி மண்டலத் தலைவர்கள், பகுதிச் செயலாளர்கள், வட்டச் செயலாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் ஏராளமான திமுக தொண்டர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர். தூத்துக்குடி மாவட்ட அரசியலில் அசைக்க முடியாத சக்தியாக விளங்கிய பெரியசாமியின் நினைவு தினத்தில் ஒட்டுமொத்த திமுகவினரும் திரண்டிருந்தது நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது.



## கன்னியாகுமரி மாவட்டத்தில்

# வளர்ச்சியடைந்த அனைத்து துறை அலுவலர்களும் ஒன்றிணைந்து பணியாற்ற வேண்டும்: அமைச்சர் அறிவுறுத்தல்

நாகர்கோவில், மே.27

கன்னியாகுமரி மாவட்டத்திற்குட்பட்ட வருவாய்த்துறை, பொதுப்பணித் துறை (கட்டடம், நீர்வளம்), ஊரக வளர்ச்சி முகமை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் சார்பில் நடைபெற்றுவரும் வளர்ச்சித்திட்ட பணிகள் மற்றும் திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து கலந்தாய்வு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் அழகுமீனா தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக வருவாய் கூட்டரங்கில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேஷ் குமார் துறை அலுவலர்களுடன், ஆய்வு மேற்கொண்டு கூறியதாவது:

பொதுமக்கள், பள்ளி கல்லூரி மாணவ மாணவியர்கள் தன்னார்வலர்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் முன்வைக்கும் கோரிக்கையினை உடனுக்குடன் ஆய்வு மேற்கொண்டு, நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் 11280 எக்டேர் நெல் பயிரிடப்பட்டுள்ளது. தென்னையில் வெள்ளைபூச்சி தாக்குதல் கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். விவசாயிகளுக்கு நில உடமை அடையாள அட்டைகள் 1,87,554 பதிவு செய்யப்பட்டுள்ளது. தொடர்ந்து வேளாண்மை துறையின் வாயிலாக செயல்படுத்தப்பட்டு வரும் முக்கிய திட்டங்கள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். இத்திட்டங்களில்அதிகளவுவிவசாயிகள் இணைந்து பயன்பெறதுறை சார்ந்த அலுவலர்கள் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

சின்ன முட்டம், குளச்சல், தேங்காய் பட்டினம், முட்டம் ஆகிய 4 இடங்களில் மீன்பிடி துறைமுகங்கள் உள்ளன. தொடர்ந்து 35 இடங்களில் மீன் இறங்கு தளங்கள் செயல்பட்டு வருகின்றன. மீனவர்களுக்காக செயல்படுத்தப்படும் திட்டங்கள் உரிய முறையில் சென்றடைகிறதா என்பது குறித்து துறை அலுவலர்கள் ஆய்வு மேற்கொள்ள வேண்டும்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை சார்பில் நடைபெறும் பணிகள், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தின் கீழ் அதிகளவில் பணிகளை மேற்கொள்ள துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

நெடுஞ்சாலை துறையின் சார்பில் நடைபெற்று வரும் தேசிய நெடுஞ்சாலை 4 வழி சாலை பணிகள், சாலை விரிவாக்க பணிகள், பாலப்பணிகள்களையும் விரைந்து முடித்திட வேண்டும். இரயில்வே துறையின் சார்பில் நடைபெற்று வரும் நுள்ளிவிளை பாலப்பணிகளை விரைந்து முடித்து பொதுமக்களின் போக்குவரத்தினை சீரமைத்திட துரித நடவடிக்கை மேற்கொள்ள துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் அரசு பள்ளிகளில் மாணவர் சேர்க்கையினை அதிகப்படுத்த வேண்டும். தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் அனைத்து சாரா தொழிலாளர் நல வாரியங்களில் பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்களுக்கான ஓய்வூதியம், விபத்து மரண உதவி தொகை, ஈமச்சடங்கு உதவி தொகை, இயற்கை மரணம் உதவி தொகை, கல்வி உதவித் தொகை, திருமண உதவி தொகை உள்ளிட்டவைகளை வழங்கிட துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

ஆதி திராவிட நல துறை, மாவட்ட வேலைவாய்ப்பு துறை, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை துறை மாவட்ட குழந்தைகள் பாதுகாப்புதுறை, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி துறை, சுற்றுலாத்துறை, இந்து சமய அறநிலை துறை உள்ளிட்ட அனைத்து துறை திட்டங்கள் செயல்படுத்துவதில் ஏதாவது பிரச்சனைகள் இருந்தால் அதனை மாவட்ட ஆட்சித் தலைவர் கவனத்திற்கு கொண்டு சென்று, என்னிடம் தெரிவித்தால் அந்தந்த துறை அமைச்சர்களிடம் தெரிவித்து உடனடியாக நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும்.

எனவே கன்னியாகுமரி மாவட்டத்தை வளர்ச்சி மாவட்டமாக கொண்டு செல்ல அனைத்து துறை அலுவலர்களும் ஒன்றிணைந்து பணியாற்ற வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். என கூறினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் அ.பூங்கோதை, மாவட்ட வன அலுவலர் அன்பு, நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் திரு.நிஷாந்த் கிருஷ்ணா மற்றும் உயர் அலுவலர்கள், நகராட்சி ஆணையாளர்கள், வட்டாட்சியர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உட்பட அனைத்துத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

## திருவட்டாறு அருகே

# சொத்துக்கு பணம் வாங்கி மோசடி; கேரளாவை சேர்ந்த 6 பேர் மீது வழக்கு

திருவட்டாறு, மே.27

குளச்சல் அருகே பாலப்பள்ளம் பகுதியைச்சேர்ந்தவர் மணி(60). கேரளம் மாநிலம் எர்ணாகுளம் மாவட்டம் வடகோடு தாரிக்கரை தெற்கு பகுதியைசேர்ந்தவர் சாரதாகுமாரி (வயது 62). இவரது கணவர் மணியன்(வயது 72). இவர்களுக்கு சொந்தமான 54 சென்ட் நிலம் ஆற்றூர் கிராமத்தில் உள்ளது.

இவற்றை விற்பனை செய்ய நில புரோக்கர்களிடம் கூறியிருந்தனர். தற்போது மணியன் குடும்பத்தார் ஆறு பேரும் கேரளாவில் நிரந்தரமாக வசித்து வருவதால் மேற்படி சொத்துக்களை தங்களால் பராமரிக்க இயலாது என்றும் மொத்தமுள்ள 54 சென்ட் சொத்தில் 7 சென்ட் நீக்கி 47 சென்ட் சொத்துக்களை சேர்த்து வாங்கினால் மட்டுமே விலைக்கு கொடுப்பதாக கூறியுள்ளனர்.

இதையடுத்து சொத்துக்களை அளந்து சென்று 1க்கு ரூ.3,50,000/ என பேசி 47 சென்றுக்கு ரூபாய் 1,64,50,000/ என பேசி முடிவு செய்து அதன் படி கடந்த ஜூன் 16 ம் தேதி முன்பணமாக ரூ.50 லட்சம் பெற்றுக் கொண்டு ரூ. 200 முத்திரைத் தாள்களில் ஒரு விலை கரார் பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளனர். இதையடுத்து மணி சொத்திற்கான மீதி தொகையை அளித்து கிரயப்பத்திரம் பதிவு செய்வதற்கான ஏற்பாடுகள் செய்து வரும் போது மேற்படி சொத்தில் சாரதாகுமாரியும், மணியனும் சேர்ந்து ஒரு ஷெட் அமைத்துள்ளனர். அதனைபார்த்து மணி கேட்டபோது அவர்கள் சொத்தை பத்திரப் பதிவு செய்வதற்கு முன்பு அப்புறப்படுத்தி கொள்வதாக கூறினர். இந்நிலையில் மேற்கண்ட சொத்துக்கள் அனைத்தும் விலை பேசிய படி மொத்தம் ரூ. 1 கோடியே 54 லட்சம் வருவதாகவும் அதில் ஒரு கோடியே பத்து லட்சம் ரூபாய் முன்பணம் பெற்று கொண்டதாகவும், இனி மீதி தொகை: 43,50,000/ தரவேண்டும் எனவும் கூறியதை அடுத்து வங்கிக்கணக்கின் படி மீதி தொகையை அளித்துள்ளனர்.

ஆனால் மொத்தமாக உள்ள 47 சென்ட் நிலத்தில் 19 சென்ட் சொத்து மட்டுமே கிரயம் செய்யப்பட்ட நிலையில்மீதியுள்ள28செண்ட்நிலத்துக்கான பணம்முழுமையாகபெற்றபின்னரும், மேற்கூறிய சொத்தை சாரதாகுமாரி தரப்பினர் எழுதிக்கொடுக்காமல் ஏமாற்றி வருவதாகவும், சொத்தை பதிவு செய்து கேட்டால் இனி சொத்து ஒன்றும் தரமுடியாது. சொத்தை எழுதிக்கேட்டால் கொன்று விடுவோம் என்று கூறி மிரட்டுவதாகவும் மணி திருவட்டார் போலீசில் புகார் கொடுத்தார். மேலும் சொத்தை எழுதி தராமல் ஏற்கனவே எழுதி தந்த சொத்திற்கு மேல் அதிகமாக ரூ. 43,50,000/ த்தை ஏமாற்றி பெற்றுக் கொண்டு வேண்டுமென்றே காலம் கடத்தி நம்பிக்கை மோசடி செய்து வருவதாகவும் புகாரில் கூறியுள்ளார்.

இது குறித்து திருவட்டார் சப் இன்ஸ்பெக்டர் சிவசங்கர் சாரதாகுமாரி, மணியன் மகள்கள் சுமி, சிஜூ மருமகன்கள் வினோத், ஷஜின் ஆகிய 6 பேர் மீதும் பி.என்.எஸ் 316(2),318(2),351(2),49 ஆகிய 4 பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

## விளாத்திகுளம் அருகே

# தவறிய 16 பவுன் தங்க நகையை செல்போன் சிக்னலை வைத்து 1 மணி நேரத்தில் நகையை மீட்ட போலீசார்

விளாத்திகுளம் மே 27

சென்னை வியாசர்பாடி சாமியார் தோட்டம் பகுதியை சேர்ந்த பாலமுருகன் மற்றும் அவரது மனைவி சாந்தி ஆகியோர் இருவரும் தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் அருகே உள்ள சொந்த ஊரான வீரப்பட்டி கிராமத்தில் நடைபெறும் கோவில் திருவிழாவிற்கு சென்னையிலிருந்து கோவில்பட்டிக்கு ரயிலில் வந்துள்ளனர்,

பின்னர் கோவில்பட்டியில் இருந்து கடலையூர் வழியாக ஒரு ஆட்டோ மூலம் தாங்கள் கொண்டு வந்த டிராவல் பேக்,ஹேண்ட்பேக், சிறிய அளவிலான ஹேண்ட்பேக் ஆகியவற்றை ஆட்டோவின் பின்பகுதியில் வைத்து வந்துள்ளனர்.

பின்னர் வீரப்பட்டி வந்து இறங்கி பார்த்தபோது, ஆட்டோவின் பின் கதவு திறக்கப்பட்டு, சிறிய அளவிலான ஹேண்ட்பேக் மட்டும் காணாமல் போனது தெரிய வந்துள்ளது. தவறவிட்ட அந்த சிறிய வகை ஹேண்ட்பேக்கில் தான் வளையல்,கம்மல்,செயின், கைச்செயின்,RED mi போன் உள்ளிட்ட பொருட்கள் இருந்துள்ளது. இதனை அடுத்து அதிர்ச்சி அடைந்த சாந்தி மற்றும் பாலமுருகன் உடனடியாக, எட்டையபுரம் காவல் நிலையத்தில் புகார் அளித்தனர்.

பின்னர் எட்டையபுரம் போலீசார் ஹேண்ட் பேக்கில் உள்ள செல்போன் நம்பரின் லொகேஷன் சிக்னல் மூலம் பார்த்தபோது, அந்த செல்போன் சிக்னல் கடலையூர் முதல் வீரப்பட்டி சாலையிலிருந்து சுமார் 30 மீட்டர் தூரத்தில் காட்டியுள்ளது,அங்கு சென்று பார்த்தபோது அந்த ஹேண்ட்பேக் மண்ணுக்குள் மூடி வைத்த படி இருந்துள்ளது.

இதனை அடுத்து மீட்டு வரப்பட்டு ஹேண்ட்பேக்கில் இருந்த 16 பவுன் தங்கநகை மற்றும் செல்போன் ஆகியவற்றை விளாத்திகுளம் டி.எஸ்.பி சுந்தரபாண்டியன், காவல்ஆய்வாளர் மணிகண்டன் ஆகியோர் தலைமையில் அடங்கிய போலீசார் சாந்தி மற்றும் பாலமுருகனிடம் நகைகளை சரி பார்த்து ஒப்படைத்தனர்.

தவறவிட்ட 16 பவுன் தங்க நகை மற்றும் செல்போனை ஒரு மணி நேரத்தில் செல்போன் சிக்னலை வைத்து மீட்ட காவல்துறையினருக்கு சாந்தி மற்றும் பாலமுருகன் தங்களின் நன்றிகளை தெரிவித்தனர். அதேபோல் தவறவிட்ட நகையை மண்ணுக்குள் புதைத்து வைத்த அந்த மர்மநபர் யார் என்பது குறித்து எட்டயபுரம் போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## காவேரிப்பட்டிணத்தில் தமிழக வெற்றி கழத்தின் சார்பில்

# நடைப்பெற்ற மாவட்ட அளவிலான கிரிக்கெட் போட்டியில் வெற்றிப் பெற்ற அணிகளுக்கு கோப்பையை வழங்கிப் பாராட்டினார்கள்


கிருஷ்ணகிரி, மே. 27

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டிணத்தில் தமிழக வெற்றி கழத்தின் சார்பில் நடைப்பெற்ற மாவட்ட அளவிலான கிரிக்கெட் போட்டியில் வெற்றிப் பெற்ற அணிகளுக்கு கோப்பையை வழங்கிப் பாராட்டினார்கள்.

தமிழக முதல்வரக. C.ஜோசப் விஜய் அவர்கள் பதவி ஏற்றுள்ளதை கொண்டாடும் விதமாக கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினம் தவெக ஒன்றிய கழகத்தின் சார்பில் மாபெரும் கிரிக்கெட் போட்டி நடைப்பெற்றது. காவேரிபட்டினம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி விளையாட்டு மைதானத்தில் துவங்கிய இத்த கிரிக்கெட்போட்டியில் கிருஷ்ணகிரி, காவேரிப்பட்டினம், போத்தாபுரம், தளிஹள்ளி, நரிமேடு, பையூர், ஜெகதாப், ஹாள்வேஹாள்ளி, திம்மாபுரம் என மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் இருந்து 24 அணிகள் கலந்தக் கொண்டு விளையாடினார்கள். நாக் அவுட் முறையில் நடத்தப்பட்ட இந்த கிரிக்கெட் போட்டியில் விளையாடி இறுதிப் போட்டிக்குதகுதிப் பெற்ற கிரிக்கெட் டீம் அணியும் 11 எப்,சி,சி அணியும் விளையாடியது. விருவிருப்பாக நடைப்பெற்ற இந்த இறுதிப் போட்டி முடிவில் கிரிக்கெட் டீம் வெற்றி பெற்றது.

பின்னர் வெற்றிப் பெற்ற அணிகளுக்கு பரிசளிப்பு விழா நடைப்பெற்றது. இந்த பரிசளிப்பு விழாவிற்கு சிறப்பு அழைப்பாளராக தவெக சட்ட மன்ற உறுப்பினர் முருந்தன் மற்றும் காங்கிரஸ் கட்சியின் பொதுக்குழு உறுப்பினரும் முன்னாள் கிழக்கு மாவட்ட காங்கிரஸ் தலைவருமான எல். சுப்பிரமணியன் ஆகியோர் கலந்துக் கொண்டு முதலிடம் பிடித்த கிரிக்கெட் டீம் அணிக்கும் ,இரண்டாம் இடம் 11 எப், சி, சி, அணிக்கும் மூன்றாம் இடம் ஆர்.சி.பி. அணிக்கும் ரொக்க பரிசுகள் மற்றும் சுழல் கோப்பைகளையும் வழங்கிப் பாராட்டினார்கள்,

மேலும் இந்த பரிசளிப்பு விழாவின் போது காவேரிப்பட்டினம் தவெக ஒன்றிய செயலாளர் விஜய் குமார்,மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் பார்த்திபன்,கிருஷ்ணகிரி நகர சசிகுமார்,திம்மபுரம் ஊராட்சி செயலாளர் விஜய், துணை ஊராட்சி செயலாளர் சக்திவேல் காவேரிப்பட்டணம் பேருராட்சி செயலாளர் கோகுல் ஒன்றிய துணை செயலாளர் உதயகுமார், ஒன்றிய இணைச் செயலாளர் பச்சையப்பா, நகர இளைஞர் அணி செயலாளர் அப்துல் ரஷீக், நகர செயற்குழு உறுப்பினர் அருண்குமார் கே.வி.எஸ். சாந்தகுமார்,உதயகுமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



## நாகர்கோவிலில் இருந்து திருச்செந்தூருக்கு

# நூற்றுக்கும் மேற்பட்ட முருக பக்தர்கள் பாதயாத்திரை

நாகர்கோவில், மே 27

திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலில் நடைபெறும் வைகாசி விசாகத் திருவிழாவை முன்னிட்டு, நாகர்கோவிலில் இருந்து திருச்செந்தூருக்கு முருக பக்தர்கள் பாதயாத்திரையாக செல்வது ஆண்டுதோறும் நடைபெறும் ஆன்மிக மரபாகும். வைகாசி விசாகம் முருகப்பெருமானின் அவதாரத் திருநாளாக பக்தர்களால் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

அதன்படி, நாகர்கோவில் ஆசாரிமார் வடக்கு தெருவைச் சேர்ந்த தவத்திரு இசக்கிமுத்து சுவாமிகளால் தொடங்கப்பட்ட அருள்மிகு முத்துக்குமார சுவாமி வைகாசி விசாகம் மற்றும் மாசி மகம் முருக பக்தர்கள் பாதயாத்திரை குழு சார்பில் நூற்றுக்கும் மேற்பட்ட முருக பக்தர்கள் பாதயாத்திரையைத் தொடங்கினர்.

முன்னதாக, நாகராஜா கோவில் அருகிலுள்ள நடராஜர் கோவிலில் காவடிகளுக்கு சிறப்பு அபிஷேகங்கள், தீபாராதனைகள், திருவாசகம் முற்றோதல் மற்றும் வழிபாடுகள் நடைபெற்றன. பின்னர், முருகப்பெருமானுக்கு உகந்த பன்னீர் , திருநீறு உள்ளிட்ட அபிஷேகப் பொருட்கள்காவடிகளில்கட்டப்பட்டு, பக்தர்கள் "வெற்றிவேல் முருகனுக்கு அரோகரா முழக்கத்துடன் திருச்செந்தூரை நோக்கி பாதயாத்திரையாக புறப்பட்டனர்.

இந்த பாதயாத்திரைக் குழுவினர் வருகின்ற 29.05.2026 அன்று திருச்செந்தூர் சென்றடைய உள்ளனர். அங்கு கடலில் புனித நீராடி, காவடிகளில் சுமந்து சென்ற அபிஷேகப் பொருட்களை செந்திலாண்டவருக்கு சமர்ப்பித்து வழிபட்டு, வைகாசி விசாக விழாவை முன்னிட்டு முருகப்பெருமானை தரிசனம் செய்ய உள்ளனர்.

பாதயாத்திரையில் கலந்து கொண்ட பக்தர்கள், முருகப்பெருமானின் அருளைப் பெறும் நோக்கில் பக்தி, ஒழுக்கம் மற்றும் ஆன்மிக உணர்வுடன் பயணத்தை மேற்கொண்டுள்ளனர். இந்த நிகழ்வு அப்பகுதி மக்களிடையே பெரும் பக்தி உணர்வை ஏற்படுத்தியுள்ளது.

## துறையூரில்

# தனியார் பள்ளி வாகனங்களை ஆய்வு செய்த சப் கலெக்டர்



திருச்சி, மே. 27

துறையூர் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் தனியார் பள்ளி வாகனங்கள் ஆய்வு செய்யப்பட்டன. முசிறி சப் கலெக்டர் சுஸ்ரி சுவாங்கி குந்தியா கலந்துகொண்டு, பள்ளி வாகனங்களில் அவசர வழி பாதையில் இடையூறாக உள்ள இருக்கைகளை அகற்றவும், மருத்துவ உபகரணங்கள் முறையாக பராமரிக்கப்படுவதை உறுதி செய்யவும் உத்தரவிட்டார்.

இந்த ஆய்வில் ஸ்ரீரங்கம் வட்டார போக்குவரத்து அலுவலர் சுரேஷ் பாபு மற்றும் துறையூர் மோட்டார் வாகன ஆய்வாளர் சதாசிவம் ஆகியோர் உடனிருந்தனர்.

## திருச்சி அருகே

# வயிற்று வலியால் கார் ஓட்டுநர் தற்கொலை

திருச்சி, மே. 27

திருச்சி மாவட்டம் உத்தமர் சீலி பகுதியைச் சேர்ந்த கார் ஓட்டுநர் முருகானந்தம், கடுமையான வயிற்று வலி காரணமாக கடந்த 23ஆம் தேதி விஷம் குடித்து தற்கொலைக்கு முயன்றார். திருச்சி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த அவர், நேற்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். அவரது உடலை பிரேத பரிசோதனைக்கு பின்னர் கொள்ளிடம் போலீசார் உறவினர்களிடம் ஒப்படைத்தனர்.

## இரணியல் அருகே

# 11 கிலோ குட்கா பறிமுதல் ஒருவர் கைது



நாகர்கோவில், மே.27

குமரி மாவட்டத்தில் கஞ்சா, குட்கா, புகையிலை உள்ளிட்ட போதைப் பொருட்கள் விற்பனை மற்றும் கடத்தலை முற்றிலும் ஒழிக்கும் நோக்கில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்டாலின் உத்தரவின் பேரில் காவல்துறையினர் தீவிர கண்காணிப்பு மற்றும் தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். அதன் தொடர்ச்சியாக, இரணியல் காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட பகுதியில் சட்டவிரோதமாக குட்கா விற்பனை நடைபெறுவதாக கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில், இரணியல் போலீசார் நேற்று தீவிர சோதனை நடத்தினர். பண்டாரக்காடு பெருமாள் கோவில் தெரு பகுதியை சேர்ந்த தங்கமணி என்பவரின் மகன் சபிந்திரன்(46) என்பவர் விற்பனைக்காக பதுக்கி வைக்கப்பட்டிருந்த 11 கிலோ அரசால் தடை செய்யப்பட்ட குட்கா பறிமுதல் செய்யப்பட்டது. இரணியல் போலீசார் வழக்கு பதிந்து சபிந்திரனை கைது செய்யப்பட்டு சிறையில் அடைத்தனர்.

## ஈத்தாமொழி அருகே

# பள்ளி அறையை உடைத்து 16 லேப்டாப்கள் திருட்டு

நாகர்கோவில், மே. 27

ஈத்தாமொழி அருகே வடக்கு சூரங்குடி பகுதியில் அரசு மேல்நிலைப்பள்ளி இயங்கி வருகிறது. இந்தப் பள்ளியில் ஏராளமான மாணவ மாணவிகள் படித்து வருகிறார்கள். தற்போது கோடை விடுமுறை என்பதால் ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் மட்டும் பள்ளிக்கு சென்று வருவது வழக்கம். கோடை விடுமுறை முடிந்து பள்ளிகள் திறக்க இன்னும் ஒரு வாரமே உள்ளதால், அதற்கான முன்னேற்பாடு பணிகளை தூய்மை பணியாளர்கள் மேற்கொண்டு வருகிறார்கள்.

இந்த நிலையில் துப்புரவு பணியில் ஈடுபட்டிருந்த பணியாளர்கள் தலைமை ஆசிரியர் அறையின் கதவு உடைக்கப்பட்டு கிடப்பது கண்டு அதிர்ச்சி அடைந்தனர். இதை தொடர்ந்து தலைமை ஆசிரியர் கிரிஸ்டல் ஜெயன் என்பவருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அவர் தனது அறையில் சென்று பார்த்தபோது அங்கிருந்த பீரோ உடைக்கப்பட்டு அதிலிருந்து பள்ளிக்கு சொந்தமான 16 லேப்டாப் மற்றும் ரூ.5,000 திருட்டு போயிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. திருடப்பட்ட பொருள்களின் மொத்த மதிப்பு சுமார் ஒன்றரை இலட்சம் இருக்கும் என கூறப்படுகிறது.

இது குறித்து ஈத்தாமொழி போலீசில் புகார் செய்யப்பட்டது. போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று தீவிர விசாரணை நடத்தினார்கள். கைரேகை நிபுணர்களும் வரவழைக்கப்பட்டு அங்கு பதிவாகியிருந்த மர்ம நபர்களின் கைரேகைகளை பதிவு செய்தனர். மோப்ப நாயும் வரவழைக்கப்பட்டு தீவிர தேடுதல் வேட்டை நடத்தப்பட்டு வருகிறது. மேலும் அந்த பகுதியில் உள்ள கண்காணிப்பு கேமராக்களின் காட்சிகளும் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

## தக்கலை பஸ் நிலையத்தில்

# பெண்ணிடம் பணம் பறிப்பு; 2 பெண்கள் கைது

நாகர்கோவில், மே. 27

தக்கலை அருகே உள்ள குமாரபுரம் பகுதியை சேர்ந்தவர் ஆல்வின் ஜோசப் மனைவி கலா(44). இவர் நேற்று தக்கலை பஸ்நிலையத்தில் இருந்து பெருஞ்சிலம்பு என்ற பகுதிக்கு செல்வதற்காக நின்று கொண்டு இருந்தார். சிறிது நேரம் காத்திருந்தபின் பஸ் வந்ததும் அந்த பஸ்ஸில் ஏறியுள்ளார்.

பஸ்ஸில் ஏறிய பின்பு தனது பையைப் பார்த்தபோது அதிலிருந்த மணி பர்ஸ் மற்றும் செல்போன் திருடப்பட்டு இருந்தது தெரிய வந்தது. உடனடியாக பஸ்சை விட்டு இறங்கிய கலா தான் நின்றிருந்த பகுதிகளில் பர்ஸ் மற்றும் செல்போனை தேடிப் பார்த்தார். ஆனால் அவை கிடைக்கவில்லை. இது குறித்து தக்கலை போலீசில் புகார் செய்தார். திருட்டுப் போன செல்போனின் மதிப்பு ரூ.17,000 என்றும், பர்சில் ரூ 1650 ரொக்க பணம் இருந்ததாகவும் புகாரில் அவர் குறிப்பிட்டுஇருந்தார். தக்கலைபோலீசார் வழக்கு பதிவு செய்து தீவிர விசாரணை மேற்கொண்டனர். மேலும் அந்த பகுதியில் வைக்கப்பட்டிருந்த சிசிடிவி கேமரா காட்சிகளை கைப்பற்றி ஆய்வு செய்தனர். அப்போது கலா பஸ்ஸில் ஏறும் போது ஏற்பட்ட கூட்ட நெரிசலை பயன்படுத்தி 2 பெண்கள் அவரது பர்ஸ் மற்றும் செல்போனை திருடியது தெரியவந்தது.

இதை தொடர்ந்து சிசிடிவி காட்சிகள் அடிப்படையில் போலீசார் தேர்தல் வேட்டை நடத்தி திருட்டில் ஈடுபட்ட நெல்லை மாவட்டம் வள்ளியூரை சேர்ந்த காயத்ரி (26), மல்லிகா ( 22) ஆகிய இரு பெண்களை கைது செய்தனர். கைது செய்யப்பட்ட இருவரிடமும் போலீசார் ரகசிய விசாரணை மேற்கொண்டு வருகிறார்கள். முதற்கட்ட விசாரணையில் கைதான இரு பெண்களும் கேரளாவிலும் இதுபோன்று பல இடங்களில் கைவரிசை காட்டி இருப்பது தெரியவந்து ள்ளது. மேலும் இவர்கள் பிடிபடும் போதெல்லாம் ஒவ்வொரு இடத்திலும் தங்களது பெயர்களை மாற்றி மாற்றி கூறி போலீசாரை ஏமாற்றி வந்ததும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் இவர்கள் வேறு எங்காவது கொள்ளை சம்பவங்களில் ஈடுபட்டு உள்ளார்களா? என்ற கோணத்தில் போலீசார் தொடர்ந்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.



வேப்பனப்பள்ளி ஊராட்சி ஒன்றியம், நாச்சிக்குப்பம் ஊராட்சி, கதிரேப்பள்ளி கிராமத்தில், வேப்பனப்பள்ளி தீர்த்தம் சாலை முதல் கதிரேப்பள்ளி வழியாக காரகுப்பம் செல்லும் சாலையில் மார்க்கண்டேயன் நதியின் குறுக்கே மாநில நிதி திட்டம் 2024-2025 ன்கீழ், ரூ.5கோடியே61 இலட்சத்து 10ஆயிரம் மதிப்பில் உயர்மட்ட மேம்பாலம் கட்டுமான பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.தினேஷ் குமார் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை உதவி செயற்பொறியாளர்கள் சம்பத் (சாலை மற்றும் மேம்பாலம்), சுப்ரமணி (கட்டுமானம்) வட்டார வளர்ச்சி அலுவலர்கள் குமரரேசன், . சாவித்திரி உள்ளிட்ட பலர் உள்ளனர்.

## பென்னாகரத்தில்

# தொடர் மழையால் நிரம்பிய தேசிய நாயக்கன் ஏரி கால்வாய் ஆக்கிரமிப்பால் குடியிருப்புகளில் சூழ்ந்த கழிவுநீர்



தருமபுரி மே 27

தருமபுரி மாவட்டம் பென்னாகரம் பகுதிகளில் பெய்த தொடர் கனமழையினால் தேசியநாயக்கன் ஏரி முழுவதுமாக நிரம்பி உபரி நீர் வெளியேறும் கால்வாய் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதால் அருகில் உள்ள சுமார் 10 க்கும் மேற்பட்ட குடியிருப்பு களில் கழிவுநீர் சூழ்ந்துள்ளது.

தருமபுரி மாவட்டம் பென்னாகரத்தின் மையப்பகுதியில் அமைந்துள்ளது 8 1/2 ஏக்கர் பரப்பளவு கொண்ட தேசிய நாயக்கன் ஏரி நகரப் பகுதியில் போதிய சாக்கடை வசதி இல்லாததால் குடியிருப்பு களில் இருந்து வெளியேறும் கழிவு நீர் அனைத்தும் தேசிய நாயக்கன் ஏரியில் தேங்கி வந்தது. கடந்த 2022 2023 ஆம் ஆண்டில் கலைஞரின் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின்கீழ் ரூ.1.79 கோடி மதிப்பீட்டில் தேசிய நாயக்கன் ஏரியை தூர்வாரி கரையை பலப்படுத்தி நடைபாதை அமைப்பதற்கான ஒப்பந்தம் தனியாருக்கு விடப்பட்டது. முதற்கட்டமாக ஏரியில் உள்ள கழிவுநீரை வெளியேற்றும் போது கால்வாய் ஆக்கிரமிப்பு தெரிய வந்து மாவட்ட அளவிலான அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டும்,

கழிவுநீர் அகற்ற முடியாமல் ஏரியிலேயே தேங்கி நின்றது. ஒரு வாரம் பணி காலம் தாமதமானதால்,நிதி ஒதுக்கீட்டை மீண்டும் மாவட்ட நிர்வாகம் பெற்றது.இந்த நிலையில் கடந்த சில நாட்களாக பென்னாகரம் பகுதியில் தொடர்ந்து கனமழை பெய்து வந்ததால் தேசிய நாயகன் ஏரி முழுவதுமாக நிரம்பியது.அண்மையில் அதிகாரிகளால் அமைக்கப்பட்ட கால்வாயில் கழிவு நீர் வெளியேறாததால்,அருகிலுள்ள சுண்ணாம்பு கார தெரு பகுதியில் சுமார் பத்துக்கும் மேற்பட்ட வீடுகளில் கழிவு நீர் புகுந்து துர்நாற்றம் ஏற்பட்டு வருகிறது. கழிவுநீர் புகுந்ததால் ஒரு சிலர் வீட்டை காலி செய்தும் ,பலர் வீடுகளில் புகுந்த கழிவு நீரை வெளியேற்றும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இது குறித்து தகவல் அறிந்த பென்னாகரம் பேரூராட்சி ஊழியர்கள் நிகழ்வு இடத்திற்கு வந்து மோட்டார் மூலம் கழிவுநீரை வாகனத்தில் எடுத்துச் செல்லும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இருப்பினும் தொடர்ந்து குடியிருப்புகளுக்குள் வடிய வடிய கழிவு நீர் சூழ்ந்து வருகிறது. வீடுகளுக்குள் கழிவு நீர் புகுந்ததால் பொருட்கள் சேதம் அடைந்துள்ளது. இது குறித்து பென்னாகரம் வட்டாட்சியர் ஆறுமுகத்திடம் பொதுமக்கள் கோரி க்கை மனு அளித்தனர் .

இதன் அடிப்படையில் பேரூராட்சி துறை அதிகாரிகளுடன் தேசிய நாயக்கன் ஏரி பகுதியினை ஆய்வு மேற்கொண்டு வடக்கு புறம் ஏற்கனவே அமைப்பட்டு பாதியில் நிறுத்தப்பட்ட கால்வாய் பணியினை முற்றிலுமாக சீர் செய்து அதன் வழியாக கழிவுநீர் வெளியேற்றும் பணியை தொடங்கி வைத்தார். புறவழி சாலையில் வழிந்து ஓடிய கழிவுநீர் பென்னாகரம் தேசிய நாய்கன் ஏரியின் கரை உடைக்கப்பட்டு வெளியேறிய நீரானது முள்ளுவாடி, முதுகம் பட்டி சாலை ,புறவழி சாலை ஓரங்களில் உள்ள கால்வாய்களின் செல்லும்போது கோட்டை ஏறிக்குச் செல்லும் கால்வாய் ஆக்கிரமிப்பால் கழிவுநீர் செல்ல முடியாமல் பென்னாகம் புறவழி சாலையில் தண்ணீர் பெருகெடுத்து ஓடியது. சாலையில் இரண்டு அடிக்கு மேல் தேங்கி நின்ற தண்ணீரை பென்னாகரம் நெடுஞ்சாலைத் துறை உதவி பொறியாளர் சிங்காளவேலன் தலைமையிலான நெடுஞ்சாலைத்துறையினர் ஜேசிபி வாகனத்தின் மூலம் புறவழி சாலையின் நடுவே உள்ள தடுப்புகளை அகற்றி கோட்டை ஏறிக்கு தண்ணீர் செல்லும் வகையில் ஏற்பாடு செய்தனர். இதனால் பென்னாகரம் புறவழி சாலை முள்ளுவாடி பகுதிக்கு செல்லக்கூடிய சாலைகளில் போக்குவரத்து சுமார் ஒரு மணி நேரத்திற்கு மேலாக பாதிக்கப்பட்டது.

## மாரண்டஅள்ளியில்

# கஞ்சா, மது விற்ற 3 பேர் கைது

தருமபுரி மே 27

தருமபுரி மாவட்டம் மாரண்டஅள்ளி பகுதிகளில் கஞ்சா விற்பனை செய்வதாக காவல்துறைக்கு தகவல் கிடைத்தது. இதையடுத்து காவல்துறையினர் தீவிர ரோத்து பணியில் ஈடுபட்டனர். காந்திநகர் பகுதியில் சந்தேகப்படும் வகையில் கையில் பிளாஸ்டிக் பையுடன் நின்றிருந்த நபர் காவல் துறையினரை பார்த்தவுடன் தப்பியோட முயன்றார். அவரைபிடித்து காவல்துறையினர் விசாரணை மேற்கொண்டனர். அவர் அதே பகுதியைச் சேர்ந்த முனியப்பன் (வயது 26 ) என்பதும் கஞ்சா விற்பனை செய்வதும் தெரிய வந்தது. இதையடுத்து அவரை காவல்து றையினர் கைது செய்தனர். அவரிடம் இருந்து கஞ்சாவை பறிமுதல் செய்தனர். இதே போல் பெல்ரம்பட்டி பகுதியைச் சேர்ந்த லீனா ( வயது 27 ) ஈச்சம்பள்ளம் பகுதியில் விஜய் (வயது 23) ஆகியோர் மது பாட்டில்களை விற்பதாக காவல்துறையினர் கைது செய்தனர். இவர்களிடமிருந்து மது பாட்டில்களை காவல்துறையினர் பறிமுதல் செய்தனர்.

## நீர்நிலைகளில் வீசக் கூடாது

# காலி மது பாட்டில்களை டாஸ்மாக் கடைகளில் கொடுத்து ரூ 10 பெற்று கொள்ளலாம்

ஈரோடு மே 27

ஈரோடு மாவட்டத்தில் 182 டாஸ்மாக் மதுபான கடைகள் உள்ளன. மலைபகுதியில் 3 டாஸ்மாக் மதுபானகடைகளும் இதில் அடங்கும். இந்த மதுபான கடைகளில் மது வாங்கி வாடிக்கையாளர்கள் அருந்திய பின் காலி மதுபான புட்டிகளை அதே கடைகளில் திரும்ப பெற்றுக்கொள்ளும் திட்டம் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டு, தற்போது அமலில் உள்ளது. சென்னை உயர்நீதிமன்ற ஆணையின்படி மீதமுள்ள 179 கடைகளுக்கு 03.12.2025 முதல் காலி மதுபான புட்டிகளை திரும்ப பெறும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, 03.12.2025 முதல் அனைத்து வகை மதுபானங்கள் மற்றும் பீர் வகைகளுக்கு சில்லறை விற்பனைக் கடைகளில் விற்பனை செய்யும் போது அதிக பட்ச விற்பனை விலையுடன் சேர்த்து 10 ரூபாய் கூடுதலாக பெறப்படும். இதற்கான கடை எண் குறிப்பிட்டு அச்சிட்ட ஸ்டிக்கர் ஒட்டப்பட்டிருக்கும். மேற்படி மதுபானங்களின் காலி புட்டிகளை ஏற்கனவே வாங்கிய கடைகளில் ஸ்டிக்கரோடு திருப்பி ஒப்படைக்கும் போது வாடிக்கையாளர்களுக்கு ரூ. 10 திரும்ப வழங்கப்படும். எனவே, வாடிக்கையாளர்கள் இனி வருங்காலங்களில் காலி மதுபான பாட்டில்களை நீர் நிலைகள் மற்றும் பொது வெளியில் தூக்கி வீசாமலும், உடைக்காமலும் சம்மந்தப்பட்ட மதுபான கடைகளில் திரும்ப ஒப்படைத்து ரூ.10 திரும்ப பெற்றுக்கொள்ளுமாறும், இத்திட்டத்திற்கு மாவட்ட நிர்வாகத்திற்கு ஒத்துழைப்பு நல்குமாறும் ஈரோடு மாவட்ட ஆட்சியர் கந்தசாமி கேட்டு கொண்டு உள்ளார்.

## கம்பைநல்லூர், பொம்மிடி அருகே

# கஞ்சா மது விற்ற கல்லூரி மாணவர் உள்பட மூன்று பேர் கைது

தருமபுரி மே 27

தருமபுரி மாவட்டம் கம்பைநல்லூர் பகுதியில் காவல்துறையினர் ரோத்து பணியில் ஈடுபட்டனர். அந்த பகுதியில் சந்தேகத்திற்கு இடமாக நின்று கொண்டிருந்த வாலிபர் காவல்துறையினரை பார்த்தவுடன் தப்பியோட முயன்றார். காவல்துறையினர் அவரை விரட்டி பிடித்து விசாரணை மேற்கொண்டனர். அவர் கம்பைநல்லூர் பகுதியைச் சேர்ந்த யோகேஷ் (வயது 18) என்பதும் பாலிடெக்னிக் கல்லூரியில் படித்து வருவதும் தெரியவந்தது. மேலும் அவர் கஞ்சா விற்றதும் தெரிய வந்தது. இதை யடுத்து அவரை காவல்துறையினர் கைது செய்தனர் அவரிடம் இருந்த கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது. இதேபோல் மொரப்பூர் காவல்துறையினர் அம்பாலப்பட்டியை சேர்ந்த சசிகுமார் (வயது 22) என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து காவல்துறையினர் கஞ்சா, மோட்டார் வாகனத்தை பறிமுதல் செய்தனர். பொம்மிடி காவல்துறையினர் ராமமூர்த்தி நகர் சோதனை சாவடி அருகில் ரோத்து சென்றனர் . அப்போது ரயில்வே பாலம் அருகில் மது பதுக்கி விற்ற முருகன் (வயது 25) என்பவரை காவல்துறையினர் கைது செய்தனர். அவரிடம் இருந்து 54 மது பாட்டில்களை காவல்துறையினர் பறிமுதல் செய்தனர்.

## திருச்சியில்

# 22 சவரன் தங்க நகை திருட்டு

திருச்சி, மே. 27

திருச்சி பாலக்கரை ரெட்டை பிள்ளையார் கோவில் தெருவைச் சேர்ந்த ஜோசப் என்பவரின் மகன் ஆலனுக்கு மே28ல்திருமணம்நடைபெறஉள்ளது.திருமணத்திற்குத் தேவையான பொருட்களை வாங்கிய பிறகு, அவற்றை பீரோவில் வைத்து சாவி அருகிலேயே வைத்துவிட்டு உறங்கச்சென்றார்.மறுநாள்காலைஎழுந்துபார்த்தபோது, பீரோவில் இருந்த 22 பவுன் தங்க நகைகள் மாயமானது தெரியவந்தது. இது குறித்து பாலக்கரை போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.




## ராயக்கோட்டையில் ஆற்காட் (ஆற்காட் ) தொண்டு நிறுவனம் சார்பில்

# உயர் கல்விக்கான வழிகாட்டுதல் நிகழ்ச்சி: கல்வியாளர் மு.திருப்பதி கலந்து கொண்டு உரையாற்றினார்

கிருஷ்ணகிரி, மே. 27

கிருஷ்ணகிரி மாவட்டம், ராயக்கோட்டையில்நடைபெற்றஆற்காட்தொண்டு நிறுவனம் சார்பில் உயர் கல்விக்கான வழிகாட்டும் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக இம்மண்ணின் மைந்தரும், சமூக சேவகர், கல்வியாளர், நெல்லை நாடார் பொறியியல்மற்றும்தகவல்தொழில்நுட்ப கல்லூரி துணை முதல்வர் மு.திருப்பதி கலந்து கொண்டு என்ன படிக்கலாம். எங்கு படிக்கலாம் ? கல்வி உதவி தொகையுடன் எப்படி படிப்பது? கல்வி உதவித்தொகைகளை எப்படி பெறுவது? யார் யாருக்கெல்லாம் கல்வி உதவித்தொகைகள் கிடைக்கும்? எந்தெந்த படிப்புகளுக்கு வேலை வாய்ப்புகள் எப்படி உள்ளது என மாணவர்களிடையே விரிவாக எடுத்துரைத்தார்? உயர்கல்வி படிப்பது குறித்து மாணவர்கள், பெற்றோர்களின் சந்தேகங்களுக்கு விரிவாகபதில்அளித்தார். இதில்கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சுற்றுவட்டார கிராமத்தில் உள்ள மாணவர்களுக்கு விரிவாக எடுத்துரைக்கப்பட்டது? நிகழ்ச்சியில் ஆற்காட்நிறுவனர்.கேசவராஜ்அவர்களும் முனைவர்.நளினிகேசவராஜ்,சிவமூர்த்தி, லூமினன்ஸ் நிறுவனம் சுதர்சன் பிள்ளை, ஆற்காட் அமைப்பைச் சேர்ந்த அதிசய குமார், ஹரிஷ், பிரசன்னா குமாரி மோகன் குமார் ரத்தினகுமார், செல்வம், ஷீலா குமார் ஏற்பாடுகளை செய்து இருந்தனர் இதில் ஆற்காட் தொண்டு நிறுவனம் உறுப்பினர்கள், ஆசிரியர்கள், மற்றும் ஏராளமானபெற்றோர்கள்ஏராளமானோர் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

## தஞ்சாவூர் மாவட்டத்தில்

# பிரதம மந்திரி கௌரவ நிதிக்கு தகுதியுடைய விடுபட்ட விவசாயிகள் பயன் பெற சிறப்பு முகாம்: கலெக்டர் தகவல்



தஞ்சாவூர் மே 27

தஞ்சாவூர் மாவட்டத்தில் பிரதம மந்திரி கௌரவ நிதிக்கு தகுதியு டைய விடுபட்ட விவசாயிகள் பயன் பெற சிறப்பு முகாம் . நில உடமையை பதிவு செய்யா விட்டால் கௌரவ நிதி நிறுத்தப்படும் என தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர் பிரியங்கா பங்கஜம் எச்சரிக்கை விடுத்துள்ளார்

இது தொடர்பாக அவர் வெளி யிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது:

தஞ்சாவூர் மாவட்டத்தில் பிரதம மந்திரி கௌரவ நிதி உதவி திட்டத்தின் கீழ் வங்கி கணக்குடன் ஆதார் எண்ணை இணைக்காத 3,069பேர், மின்னணு கேஓய்சி பதிவு செய்யாத 1, 196 பேர் ஆதார் எண் மற்றும் மின்னணு கே. ஒய்.சி பதிவு செய்யாத 252 பேர்.இத்திட்டத்தின் பலனை பெற முடியாத நிலையில் உள்ளனர்

தகுதியுடைய அனைத்து விவசாயிகளும் வட்டார அளவில் நடை பெறும் பிரதம மந்திரி கவுரவ நிதி உதவி திட்ட சிறப்பு முகாமில் பங்கேற்று தங்களின் ஆவணங்களில் உள்ள குறைபாடுகளை சரி செய்து தொடர்ந்து, இத்திட்டத்தில் பயன் பெற வேண்டும். இதற்காக தஞ்சாவூர் மாவட்டத்தில்உள்ளதங்களதுவட்டாரவேளாண் உதவி இயக்குனர் அலுவலகத்தையோ தங்கள் பகுதி உதவி வேளாண் அலுவரையோ தொடர்பு கொண்டு விடுப்பட்ட விபரங்களை பதிவு செய்ய வேண்டும்

பிரதம மந்திரி கௌரவ நிதி உதவி திட்டத்தின் கீழ் 23 வது தவணை ஜூலை மாதத்தில் வழங்கப்பட உள்ளநிலையில் நில ஆவண விவரங்கள் புதுப்பித்தல், வங்கி கணக்குடன் ஆதார் இணைப்பு, மின்னணு கே. ஓய் சி பதிவு உள்ளிட்ட தகவல்களை சரிசெய்ய வேண்டியது அவசியம். இதன் மூலம் விடுபட்ட தகுதியுடை ய விவசாயிகள் தொடர்ந்து பயன் பெற முடியும்

மேலும் இத்திட்டத்தின் கீழ் தவணை தொகை பெற்று வரும் 7,553 விவசாயிகள் தனித்துவ அடையாள பதிவு எண்ணை (எப்.ஆர்) மேற்கொள்ளப்படவில்லை. நிலஉடமை பதிவு செய்யாத பயனாளிகளுக்கு பிரதம மந்திரி கவுரவ நிதிஉதவி திட்ட தவணை தொகை நிறுத்தப்படவாய்ப்பு உள்ளதால் விவசாயிகள் உடனடி யாக தங்களின் நில உடைமைகளைபதிவுசெய்து,திட்டத்தின் தொடர்ச்சியாக பலனை உறுதி செய்து கொள்ள வேண்டும்

ஏற்கனவே இத்திட்டத்தின் பயனாளியாக இருந்து இறந்த வர்களின் வாரிசுகள் தங்கள் பெய ரில் நில ஆவணங்கள் மாற்றி இருக்கும் பட்சத்தில் உரிய ஆவணங்களான இறப்பு சான்றிதழ், வாரிசு சான்றிதழை கொண்டு புதிதாக பதிவு செய்து இத்திட்டத்தின் பயனை பெறலாம். தஞ்சாவூர் மாவட்ட விவசாயி அனைவரும் இந்த சிறப்பு முகாம்களை முழு மையாக பயன்படுத்தி, பிரதம மந்திரி கவுர நிதிஉதவி திட்டத்தின் மூலம் வழங்கப்படும். நிதிஉதவி யை பெற தேவையான அனைத்து நடைமுறைகளையும் உடனடியாக பின்பற்ற வேண்டும்.

மேற்கண்டவாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## தஞ்சாவூரில்

# கல்லணை கால்வாய் நடைபாதை சீரமைப்பு பணி கலெக்டர் ஆய்வு



தஞ்சாவூர் மே 27

தஞ்சாவூர் காந்திஜி சாலையில் உள்ள இரும்பின்பாலம் அருகே கல்லணை கால்வாய் இடது கரையில் நடை பாதை சீரமைக்கும் பணி நடைபெறுகிறது

இப்பணியை மாவட்ட கலெக்டர் பிரியங்கா பங்கஜம் ஆய்வு செய்து தெரிவித்ததாவது

நீர்வளத்துறை மூலம் இர்வின்பாலம் முதல் எம்கே மூப்பனார் சாலை வரை உள்ள மாமன்னர் ராஜராஜ சோழன் நடைபாதையில் சேதமடைந்துள்ள கான்கிரீட் தூண்களை அகற்றி இரும்பலான தூண்கள் அமைக்கப் படுகின்றன. மேலும் நடைபாதை யில் உள்ள சேதமடைந்த மின்விளக் குகளை அகற்றி புதிய மின்விளக்கு கள் அமைக்கும் பணி சுமார் ரூபாய் 60 லட்சம் மதிப்பில் நடைபெற்று வருகிறது என்றார்

அப்போது மாவட்ட வருவாய் அலுவலர் தியாகராஜன், நீர்வளத் துறை உதவி செயற்பொறியாளர் கல்லணை கால்வாய் சரவணன் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.